தமிழ் நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1970 ஆகஸ்ட் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 1, 2 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

தொழில் நுட்பக் கல்விக்குத் தனி பல்கலைக் கழகம்.

* 3 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற் கல்விக்குத் தனி சர்வகலாசாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இந்தச் செயற்குறிப்பு தொடக்க நிலையிலேயே உள்ளது. இது குறித்த விவரங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை. இந்தச் செயற்குறிப்புக்குத் தாற்காலிக முறையில் இசைவளிக்கப்பட்ட பின்னரே இப்பணி மேற்கொள்ளப்படும்.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, தொழிற் கல்விக்குத் தனி சர்வகலாசாலை ஏற்படுத்துவதற்கு இசைவளிக்கப்பட்ட பின்னரே இப்பணி மேற்கொள்ளப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தவேண்டும் என்று மாநிலத் தொழில் நுட்பப் பயிற்சி வாரியம் 6–10–1969 அன்று நடந்த கூட்டத்தில் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருக்கிறது. இதுபற்றி செயற்குறிப்பு முழுவதும் தயாரிக்கும்படியாகத் தொழிற்கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். இதற்கிடையில் மத்திய அரசாங்கக் கல்வி அமைச்சகத்தினுடைய ஒப்புதலையும் நாம் பெறவேண்டும். அத்துடன், பல்கலைக்கழக

மானியக் குழுவின் ஒப்புதலையும் பெற வேண்டும். மேலும், முழு விவரங்களை நாம் அனுப்ப வேண்டியவர்களாக இருக்கிறோம். தொழில்நுட்பப் பயிற்சி வாரியத்தில் அதுபற்றி முடிவு எடுக்கப்படும். அதற்குப் பிறகுதான் அதுபற்றிய முழு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that this Technical University would have Coimbatore as its headquarters and if so, whether any request has come from the technical institutions that are now functioning at Coimbatore?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு ஒன்றும் இப்பொழுது இல்லை. எல்லாப் பொறியியல் கல்லூரிகளும், டிப்ளமா சான்றிதழ்கள் வழங்கும் பயிற்சி நிலையங்கள் அத்தனையும் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின்கீழ் வரக்கூடும். அப்படி வந்தால், அதற்கேற்ற இடம் சென்னையாகத்தான் இருக்கும். பல்வேறு பொறியியற் கூடங்கள், தொழில் நுட்ப நிலையங்கள் அத்தனையும் விரிவான முறையில் சென்னையில் இருப்பதால் அதற்குத் தலைமையிடம் சென்னையாகத்தான் இருக்கக் கூடும். ஆனால், அதுபற்றிய முடிவுகள் இப்பொழுது எடுக்கக்கூடிய நிலையில் இல்லை. முழு விவரங்கள் வந்தபிறகு அதுபற்றிய முடிவு எடுக்கப்படும்.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, கோவையில் பொறியியல் கல்லூரியும் மற்ற பல்வேறு தொழில் துறைகளும் இருக்கின்றன. ஆகவே, அந்த இடத்தில் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கு நம்முடைய அரசு சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் நான் குறிப்பிட்டேன். அதுபற்றி முடிவு பின்னால் எடுக்கப்பட வேண்டும். எல்லாப் பொறியியல் கல்லூரிகளும் இணைக்கப்படும் நிலையில் பல்வேறு தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில்நுட்ப நிலையங்கள் அத்தனையும் கொண்ட தலைமையிடமாகச் சென்னை இருப்பதால், சென்னைதான் அதற்கேற்ற இடமாக இருக்கக்கூடும். ஆனால், அதுபற்றி முடிவு எடுக்க வேண்டும். பின்னால்தான் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மத்திய அரசு ஒப்புதல் வழங்க வேண்டும். அதற்காகக் கடிதப் போக்குவரத்து ஏதாவது நடந்திருக்கிறதா? அது என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மேலும் முழு விவரங்கள் அனுப்ப வேண்டியவர்களாக இருக்கிறோம். தொடராச் செலவு என்ற வகையில் கட்டடங்கள், பர்னிசர் எக்விப்மென்ட் முதலியவற்றுக்காக அதிகப்படியாக இருபது லட்ச

1970 ஆகஸ்ட் 25]

ரூபாய்தான் செலவழிக்கவேண்டி வரும். தொடரும் செலவு என்ற வகையில் இரண்டு லட்ச ரூபாய்தான் அதிகச் செலவு ஏற்படக் கூடும். ஏனென்றால், ஏற்கெனவே கல்லூரிக்கான கட்டடங்கள் முதலியவை இருக்கும். இந்தக் குறிப்பையும் காட்டி, குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மேலும் முழு விவரங்கள் தயாரித்து அனுப்பவேண்டும். இது இங்கிருக்கும் டெக்னிகல் போர்டிலும் நிறைவேறவேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : தொழில் நுட்பக் கல்வி பெற்றவர்கள் குறிப்பிட்ட வேலைகளைத் தவிர வேறு வேலைக்குப் போக முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, தொழில்நுட்பக் கல்லூரிகள், பள்ளிகள் துவக்குவதற்கு முன்பாகவோ அல்லது துவக்கி நடைபெறும்போதோ, அவற்றிலிருந்து பயிற்சி பெற்றுத் தேறி வெளிவருகின்றவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் பொறுப்பினை அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தொழில் நுட்பக் கல்வி பெற்று வெளிவருபவர்களுக்கு வேலை வாய்ப்பை விரிவுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்திய அரசினர், புதிய இடங்களைத் தோற்றுவிப்பதற்கு முன் இருக்கும் இடங்களில் பயிற்சி பெற்று வெளிவருபவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துச் சமாளிக்கவேண்டும் என்றும், சில பல இடங்களைக் குறைக்கவேண்டும் என்றும் தெரிவித்த நிலைமையில் ஒவ்வொரு மாநிலத்திலும் குறைத்துக்கொண்டது போலவே நாமும் ஓரளவு குறைத்துத் தேவையான அளவு வைத்துக்கொண்டிருக்கிறோம். சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையைவிட சென்ற ஆண்டு நிலைமை ஓரளவு மாறி, அவர்களுக்கு ஓரளவு நல்ல வாய்ப்பு ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் துவக்கப்படாத நிலையில் இரண்டு மூன்று ஆண்டுக்காலமாக அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படாமல் இருந்து, இப்பொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் துவக்கப்பட்ட நிலையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கான சூழ்நிலை இப்பொழுது ஏற்பட்டுவிட்டதன் காரணமாக எதிர்காலத்தில் பொறியியல் துறையில் இருப்போரை அதிகமாக ஈர்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே. இப்பொழுதிருக்கும் தன்மையில் இருக்கின்ற இடங்களுக்குமேல் அதிகரிக்காமல், இருக்கும் இடங்களையே சரிக்கட்டலாம் என்ற சூழ்நிலை இருக்கிறது.